MCOP 71/2014
ம.சா.1 வினோத் த/பெ சந்தோஷ்
நாள் 09.04.2025

**குறுக்கு விசாரணை**

1. விபத்து நடந்த தேதி நினைவில்லை. எனக்கு விபத்து நடந்த போது 14 வயது இருக்கும். அப்போது நான் ஆரணியில் சுப்பிரமணி சாஸ்த்திரி பள்ளியில் 10ம் வகுப்பு படித்து வந்தேன்.

2. விபத்து நடந்த சமயத்தில் நான் நெசல் கூட்ரோட்டில் இருந்து ஆரணிக்கு பேருந்தில் ஏறினேன். அந்த பேருந்து சேத்பட்டிலிருந்து ஆரணிக்கு செல்லும் பேருந்து ஆகும். நான் பயணம் செய்த பேருந்தில் இருக்கைகள் அனைத்தும் நிரப்பப்பட்டு பயணிகள் நிறைய பேர் நின்று கொண்டு பயணம் செய்தார்கள். நான் பேருந்தில் ஏறிய உடன் டிக்கெட் வாங்கினேனா என்றால் இல்லை.

3. விபத்து சம்மந்தமாக புகார் யார் கொடுத்தது என்று எனக்கு தெரியாது. என் முதல் விசாரணை வாக்குமூலத்தில் 4ம் பத்தியில் பேருந்தை அதன் ஓட்டுநர் நெசல் பஸ் ஸ்டாப்பில் இருந்து 100 அடி தள்ளி உள்ள 1அடி ஆழம் உள்ள ஒரு பெரிய பள்ளத்தில் பேருந்தை அதிவேகமாகவும் அஜாக்கரதையாகவும் ஓட்டி வந்து அந்த பள்ளத்தில் இறக்கி ஏற்றியதால் பேருந்து நிலைகுலைந்தது என்று சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். ஆனால் ம.சா.ஆ2 முதல் தகவல் அறிக்கையில் அவ்வாறு பேருந்தை அதன் ஓட்டுநர் நெசல் பஸ் ஸ்டாப்பில் இருந்து 100 அடி தள்ளி உள்ள 1அடி ஆழம் உள்ள ஒரு பெரிய பள்ளத்தில் பேருந்தை அதிவேகமாகவும் அஜாக்கரதையாகவும் ஓட்டி வந்து அந்த பள்ளத்தில் இறக்கி ஏற்றியதால் பேருந்து நிலைகுலைந்தது என்று குறிப்பிட்டு சொல்லப்படவில்லை என்றால் சரிதான்.

4. விபத்து சமயத்தில் நான் பள்ளியில் படித்து வரும் மாணவன் என்பதால் எனக்கு வருமானம் எதுவும் இல்லை என்றால் சரிதான். நான் விபத்து சமயத்தில் வேகமாக ஓடிச்சென்று பேருந்து ஏற முயற்சித்து பேருந்து படிக்கட்டில் உள்ள கம்பியை பிடித்த போது கை நழுவி கீழே விழுந்து விபத்து ஏற்பட்டது என்று நான் பேருந்தில் டிக்கெட் எடுக்கவில்லை என்பதால் பேருந்தில் அன்றைய தினம் பயணம் செய்த பயணியாக என்னை கருதமுடியாது என்று சொன்னால் சரியல்ல. நான் அன்றைய தினம் அரசு பேருந்து வருவதற்கு 10 நிமிடங்கள் முன்பே பேருந்து நிறுத்தத்திற்கு வந்துவிட்டேன். மேலும் பேருந்தில் பயணிக்க எனக்கு பாஸ் உள்ளதால் நான் பேருந்தில் டிக்கெட் எடுக்கவில்லை. அவ்வாறு நான் விபத்து சமயத்தில் வைத்திருந்ததாக சொல்லம் பேருந்தின் பாஸ் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை.

5. நான் தாக்கல் செய்துள்ள ம.சா.ஆ5 மருத்துவ ரசீதுகள் முன்னிலைக்கு எவ்வளவு செலவு ஆனது என்றால் ரூ.3,50,000/-க்கு மேல் செலவு ஆனது. நான் அதிகப்படியான நஷ்ட ஈடு பெற வேண்டும் என்பதற்காக பெறப்பட்ட ரசீதுகள் தான் நான் வழக்கின் தாக்கல் செய்துள்ளவை என்றால் சரியல்ல. அவை உண்மையான ரசீதுகள் தான்.

6. நான் என் ஊனத்தின் தன்மை குறித்து ஊனச்சான்று தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. நான் தாக்கல் செய்துள்ள ம.சா.ஆ8 மாதிரி வரைபடம் மற்றும் ம.சா.ஆ9

பார்வை மகசரிலும் விபத்து நடந்த இடத்தில் பள்ளம் இருந்தது குறித்து குறிப்பிட்டு சொல்லப்பட்டுள்ளதா என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது.

7. இந்த விபத்தானது நான் ஓடிக்கொண்டிருந்த பேருந்தில் ஏற முயற்சி செய்து பேருந்தின் படிகட்டில் கம்பியை பிடிக்க முயற்சித்த போது கை நழுவி கீழே விழுந்து ஏற்பட்டது என்றும் அதனால் இந்த விபத்தானது என்னுடைய அஜாக்கரதையினால் தான் ஏற்பட்டது என்றும் பேருந்து ஓட்டுநரின் அஜாக்கரதையால் ஏற்படவில்லை என்று சொன்னால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள ம.சா.ஆ10 தீர்ப்புரையின் படி பேருந்து ஓட்டுநருக்கு தண்டனை வழங்கப்பட்டுள்ளது என்றும் அந்த தீர்ப்பிணை எதிர்த்து மேல் முறையீடு எதுவும் தாக்கல் செய்யப்பட்டுள்ளதா என்பது பற்றி எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. ம.சா.ஆ10 தீர்ப்புரையின் மீது மேல் முறையீடு தாக்கல் செய்து பேருந்து ஓட்டுநர் குற்றவாளி இல்லை என்று விடுதலை செய்யப்பட்டுள்ளார் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. நான் கோரியுள்ள இழப்பீட்டு தொகை அதிகமானது என்றும் அதனால் இந்த மனுவை தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல.